**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 01.04.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 12391/SCIC/2023

திரு.சரவணன் த/பெ. வெங்கடேசன் — மேல்முறையீட்டாளர்
எண்.599, கொல்லகொட்டா
சென்னசமுத்திரம் கிராமம்
செங்கம் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம் ... பொது அதிகார அமைப்பு
செங்கம் சார்பதிவகம்
திருவண்ணாமலை மாவட்டம்.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 11/04/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ சார் பதிவாளர், செங்கம் சார் பதிவகம், திருவண்ணாமலை மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் சார் பதிவாளர் அலுவலகத்தில் நிலம் சம்பந்தமான ஆவணங்கள் பராமரிக்கப்படும் ஆவணங்களின் பெயர், பட்டியலை தகவலாக தருமாறு கேட்டுக் கொள்கிறேன் ” என்பன போன்று 8 (எட்டு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.பொதுத் தகவல் அலுவலர்/ சார் பதிவாளர், செங்கம் சார்பதிவகம் அவர்கள் மனுதாரருக்கு கடித எண்.137/2023, நாள் 10/05/2023 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 15/05/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 10/07/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 12391/SCIC/2023 ஆக

பதிவு செய்தது. பின்னர், பொது தகவல் அலுவலர்/ சார் பதிவாளர், செங்கம் சார்பதிவகம் அவர்கள் மனுதாரருக்கு கடித எண்.137/2023, நாள் 17/10/2024 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளதோடு, அதன் நகலை ஆணையத்திற்கும் அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் 29/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை கடிதம் அனுப்பியுள்ளார்.

3. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 01/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு பொ.சிவசங்கரன், சார் பதிவாளர் (பொ), செங்கம் சார்பதிவகம் அவர்கள் ஆஜரானார். மனுதாரர், தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவில் தனக்கு பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவலில் இனங்கள் 1,4,6 மற்றும் 7 ஆகியவற்றிற்கான தகவல் முழுமையானதாக இல்லை எனத் தெரிவித்திருந்தார், அதனையே இன்றைய விசாரணையின்போதும் வலியுறுத்தினார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர், ஏற்கெனவே மனுதாரருக்கு 10/05/2023தேதியிட்டு தகவல் அனுப்பியிருப்பதாகவும், சமீபத்தில் மீண்டும் 17/10/2024 தேதியிட்டு, மனுதாரர் கோரியுள்ள இனங்கள் 1,4,6 மற்றும் 7-க்கு திருத்திய தகவலை அனுப்பியிருப்பதாகத் தெரிவித்தார். அதன் பின்னர், மனுதார ர், 17/10/2024 தேதியிட்ட தகவலில் இனம் 6-க்கான தகவல் மட்டுமே சரியானது மற்றவை சரியானதாக இல்லை என்றார்.

**பொதுத் தகவல் அலுவலரால் 17/10/2024 தேதியிட்டு மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலை ஆணையம் பரிசீலனை செய்கையில், இனங்கள் 1, 7 ஆகியவற்றிற்கான தகவல் ஆவணங்களின்படியான உரிய தகவலை அனுப்பியிருப்பதாக ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. எனவே, இனம் 4-க்கு மட்டும், திருத்திய தகவலுடன் பதிவுத்துறைத் தலைவர், சென்னை அவர்கள் 2012 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வழங்கியுள்ள சுற்றறிக்கைகளின் நகல்களை இணைத்து இவ்வாணை கிடைக்கப் பெற்ற 10 (பத்து) தினங்களில் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, மனுதாரருக்கு அனுப்பிய தகவலின் நகல் மற்றும் மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை சான்றின் நகல் ஆகியவற்றை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. இத்துடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12391/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
செங்கம் சார்பதிவகம்
திருவண்ணாமலை மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.சரவணன் த/பெ. வெங்கடேசன்
எண்.599, கொல்லகொட்டா
சென்னசமுத்திரம் கிராமம்
செங்கம் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

RG/PC